

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (05–04–2025) உதகையில் நடைபெற்ற 'நீலகிரி மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான சந்திப்பு' நிகழ்ச்சியில் பங்கேற்று, 2026ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் பணிகளுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினார்.

# நீலகிரியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் கள ஆய்வு - உற்சாக வரவேற்பு!













தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.4.2025) குஞ்சப்பனையில் கடந்த மழையின்போது நிலச்சரிவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சரிவு தளம் திடப்படுத்தும் பணிகளையும் மற்றும் கேபியான் சுவர் (GABION WALL) அமைக்கும் பணிகளையும் பார்வையிட்டு, ஆய்வு செய்தார். இந்நிகழ்வின்போது, பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, தமிழ்நாடு அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நெடுஞ்சாலைத் துறை சிறப்புப் பணி அலுவலர் சந்திரசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.













